2005 மார்ச் 28]

205—

நகைக் கடன்

*** 7827—திரு. மே.ப. காமராஜ்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட ஆரூர்ப்பட்டி ஊராட்சியிலுள்ள ஆரூர்ப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு நகைக் கடன் வழங்க சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் அனுமதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆரூர்ப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் உறுப்பினர்களது கடன் நிலுவைக்கும், மேற்படி வங்கி மத்தியக் கூட்டுறவு வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவைக்கும் சமன்பாடு இல்லை. 31–3–2003 அன்றுள்ளபடி உறுப்பினர்கள் அளவில் சமமின்மை ரூ.85.66 இலட்சமும், மத்திய வங்கி அளவில் ரூ.113.76 இலட்சமும் ஆக உள்ளது. 31–3–2004 அன்றுள்ளபடி உறுப்பினர் அளவில் ரூ.85.19 இலட்சமும், மத்திய வங்கி அளவில் ரூ.115.76 இலட்சமும் உள்ளது. எனவே, நகைக் கடன் வழங்க போதிய சொந்த நிதி ஆதாரம் இல்லை என்பதோடு நகைக் கடன் வழங்க தேவையான நிபந்தனைகளையும் வங்கியால் பூர்த்தி செய்ய இயலவில்லை. ஆகவே, சொந்த நிதி ஆதாரத்தைப் பெருக்கி, தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பொழுது இவ்வங்கிக்கு நகைக் கடன் வழங்க அனுமதி அளிக்கப்படும்.*

(ஆ) கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. வினா எண் 206, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*